# முயற்சியாண்மைக்கல்வி

**02**

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## சந்தைப்படுத்தல் திட்டம்

## தரம் 11

**கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1) வணிகமொன்றினால் சந்தைப்படுத்த எதிப்பார்க்கும் இலக்குச் சந்தை மற்றும் இலக்குச் சந்தையை அடைந்துக்கொள்வதற்கான வழிமுறையை காட்டும் அறிக்கை
   1) உற்பத்தி திட்டம்
   2) விற்பனைத் திட்டம்
   3) சந்தைப்படுத்தல் திட்டம்
   4) நிதித் திட்டம்

2) விற்பனை எதிர்வுகூறல் உள்ளடங்குவது எத்திட்டத்திலாகும்
   1) உற்பத்தி திட்டம்
   2) விற்பனைத் திட்டம்
   3) சந்தைப்படுத்தல் திட்டம்
   4) நிதித் திட்டம்

3) சந்தைப்படுத்தல் கலவையில் உள்ளடங்கும் பிரதான மாறிகள்
   1) உற்பத்தி , விலை , மாற்றுவழிகள், கழிவு
   2) உற்பத்தி , விலை , இடம், மேம்படுத்தல்
   3) உற்பத்தி , விலை , இடம், கழிவு
   4) உற்பத்தி , விலை , விளம்பரம், கழிவு

4) சந்தைப்படுத்தல் வழிமுறைகளை தீர்மானிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயம்.
   1) விலை தொடர்பான பகுப்பாய்வு
   2) சந்தை தொடர்பான பகுப்பாய்வு
   3) போட்டியாளர் தொடர்பான பகுப்பாய்வு
   4) உற்பத்தி தொடர்பான பகுப்பாய்வு

5) சந்தைப்படுத்த உத்தேசித்துள்ள பொருட்கள் சேவைகளுக்கு கேள்வியை ஏற்படுத்துவதற்காகவும் , ஏற்கனவே இருக்கும் கேள்வியை அதிகரிப்பதற்காக , இலக்கு வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்காகவும் , பயன்படுத்தப்படும் சந்தைப்படுத்தல் கலவை.
   1) உற்பத்திக் கலவை
   2) செலவு
   3) மேம்படுத்தல்
   4) இடம்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

6) எதிர்வரும் குறிப்பிட்ட காலத்திற்குள் முயற்சியாளர் சந்தைக்கு முன்வைக்க திட்டமிட்டிருக்கும் பொருட்கள் மற்றும் சேவைகள் அளவை தீர்மானிப்பது.

1) சந்தைப்படுத்தல் திட்டம்
2) சந்தை எதிர்வுகூறல்
3) விற்பனை எதிர்வுகூறல்
4) சந்தை பகுப்பாய்வு

7) வணிகம் மற்றும் தொடர்புபட்ட சந்தை தொடர்பாகப் பரீட்சித்துப் பார்ப்பது

1) சூழல் தொடர்பான பகுப்பாய்வு
2) சந்தை தொடர்பான பகுப்பாய்வு
3) சந்தை தொடர்பான சமன்பாடு
4) விற்பனை எதிர்வுகூறல்

8) பொருளின் வடிவம் , பொருளின் தரம் , அளவு ஆகிய விடயங்களை உள்ளடக்கும் சந்தைப்படுத்தல் கலவை மாறியாக அமைவது.

1) விலை
2) உற்பத்தி
3) இடம்
4) மேம்படுத்தல்

## பகுதி II

❖ நகர பகுதியில் வசிக்கும் சமதரா கேக் தயாரிப்பதற்கான பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்தவராவார். அவரின் தந்தையின் உதவியுடன் கேக்குகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் வணிகமொன்றினை ஆரம்பிக்க தீர்மானித்து அதற்கான வணிகத்திட்மொன்றினை தயாரிப்பதற்கான தகவல்களை சேகரித்தார்.
சேகரித்த தகவல்களை கொண்டு சந்தையில் கேக் தொடர்பாக காணப்பட்ட கேள்வி வருமாறு.

| கேக் வகை | நாளொன்றுக்கான கேள்வி (Kg) | கிலோ ஒன்றின் விலை ரூ |
|---|---|---|
| வெனிலா | 200 | 300 |
| சொக்லட் | 100 | 350 |
| பழவகை | 50 | 450 |

தற்போது காணப்படும் கேக்கிற்கான கேள்வியில் 10% ஐ கைப்பற்றுவதற்கு சமதரா தீர்மானித்தார் . அதற்காக ரூ 500 000 பெறுமதியான கேக் தயாரிக்கும் உபகரணம் ஒன்றையும் கொள்வனவு செய்தார். அவருடைய வணிகத்திற்கான மாதாந்த செலவு வருமாறு.

| | |
|---|---|
| விற்பனை ஊழியர் சம்பளம் | ரூ 10 000 |
| விற்பனை மேம்பாட்டு செலவு | ரூ 7 000 |
| எரிபொருட்கள் செலவு | ரூ 8 000 |

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

கேக் விற்பனை செய்யும் நோக்கத்திற்காக ரூ 600 000 பெறுமதியான முச்சக்கரவண்டி ஒன்றினை கொள்வனவு செய்ய தீர்மானித்ததுடன் அதற்கு 10 % வருடாந்த தேய்விடப்பட வேண்டும்.

மேலுள்ள தகவல்களுக்கு அமைவாக சமதரா வணிகத்தின் வணிகதிட்டத்திற்கு தேவையான கீழ்வருவனவற்றைக் கணிப்பிடுக. (மாதமொன்றிக்கு 30 நாட்கள் உள்ளதாக கருதுக.)

1) கேக் வகைகளுக்கு மாதமொன்றிக்கான கேள்வியை (Kg) கணிப்பிடுக.
2) கேக் வகைகளுக்கு வருடமொன்றிக்கான கேள்வியின் பெறுமதியை (ரூ) கணிப்பிடுக.
3) சமதரா வணிகத்தின் வருடமொன்றிக்கான விற்பனை எதிர்வுகூறல் எவ்வளவு?
4) வணிகத்தின் சந்தைப்படுத்தல் நிலையான சொத்தக்களின் பெறுமதி எவ்வளவு?
5) வணிகத்தின் வருடமொன்றிக்கான முழு சந்தைப்படுத்தல் செலவு எவ்வளவு?

COMMERCE &BUSINESS STUDIES BRANCH